# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>

2007ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

1. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (இருபதாண்டு) எண் 104 நாள் 26–6–2007ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழஙகப்படும் கூட்ட அமர்வுப்படி தொகை ரூ 330/–ல் இருந்து ரூ 600/– ஆக உயர்த்தி வழஙக ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான வாகனஙகளை பயன்படுத்தும் தலைவர் மற்றும் மற்றும் துணைத் தலைவர்களுக்கு அமர்வுப்படி வழஙகப்பட மாட்டாது என ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள அரசாணையை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்.

சி1. 14400/07

**<u>தீர்மான எண் –382</u>**

அலுவலகக் குறிப்புபடி பதிவு செய்யப்பட்டது.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை கடித எண் அ2.1235/2007–1 நாள் 22–6–2007 செயல்முறை ஆணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2007–08ஆம் நிதியாண்டிற்கு மாண்புமிகு தமிழக கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்த பின் வரும் அட்டவணையிற் கண்ட பணியினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழஙகி உத்திரவிடப்பட்டுள்ளது. இதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ எண் | பணிகள் பெயர் | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட ஒதுக்கீடு (ரூஇலட்சத்தில்) | மதிப்பீடு (ரூலட்சத்தில்) | நிர்வாக அனுமதி வழஙகப்படும் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | மார்க்கட்டில் சிமிண்ட்தளம் அமைத்தல் | 13.00 | 13.00 | 13.00 |
| 2 | கதிரேசன் கோவில் தெருவில் சிமிண்ட் சாலைஅமைத்தல் | 4.00 | 4.00 | 4.00 |
| 3 | ஹோலிகிராஸ்கான்வெண்ட் ஒட்டிய பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.00 | 6.00 | 6.00 |
| 4 | பிரையண்ட்நகர் 2வது தெருவில் கப்பிச்சாலையினை தார்ச்சாலையாக அமைத்தல் | 12.00 | 12.00 | 12.00 |
| 5 | போல்டன்புரம் மெயின் ரோடு பகுதியில் தார்சாலை அமைத்தல் புதுக்கிராமம் சாலைமுதல் சிதம்பரநகர் மெயின்ரோடு வரை (வார்டு எண். 44–45) | 15.40 | 15.40 | 15.40 |
| 6 | போல்பேட்டை கிழக்குத்தெருவில் கப்பிச்சாலையினை தார்ச்சாலையாக உயர்த்துதல் | 6.60 | 6.60 | 6.60 |
| 7 | போல்பேட்டைமேலத்தெரு தெற்கு வடக்கு தெருக்களில் கப்பிச்சாலையினை தார்ச்சாலையாக உயர்த்துதல் | 8.00 | 8.00 | 8.00 |
| 8 | டி.எம்.பி. காலனியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 | 5.00 | 5.00 |
| 9 | வடக்கு ராஜா தெரு தட்டார் தெரு தொடர்ச்சி பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.80 | 4.80 | 4.80 |
| 10 | லயன்ஸ் டவுண் பகுதியில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல் | 3.00 | 3.00 | 3.00 |
| 11 | லயன்ஸ் டவுனில் சிமெண்ட் தொட்டி மற்றும் மழைநீர் வடிகால்அமைத்தல் | 8.00 | 10.00 | 8.00 |
| 12 | டுவிபுரம் 1 ஆவது தெருவில் மழைநீர் வடிகால்அமைத்தல் | 2.00 | 2.00 | 2.00 |
| 13 | பூபாலராயர்புரம் 6வது தெருவில் தார்சாலை அமைத்தல் | 2.70 | 2.70 | 2.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | காந்தி நகர் பகுதியில் வடிகால் கட்டுதல்(வார்டு 34) | 3.00 | 3.00 | 3.00 |
| 15 | இந்திரா நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் வார்டு எண் 35 | 3.75 | 3.75 | 3.75 |
| 16 | தாமோதரநகர் சந்துகளில் சிமெண்ட் சாலை அமைத்தல்(வார்டு எண். 36) | 2.00 | 2.00 | 2.00 |
| 17 | லெவிஞ்சிபுரம் நீர்த்தேக்கத்தொட்டி அருகில் பொது விநியோக கடை கட்டுதல் | 2.20 | 2.50 | 2.20 |
| 18 | மின் கம்பத்தில் 1 தெரு விளக்கு அமைத்தல் (11 எண்ணஙகள்) | 0.66 | 0.66 | 0.66 |
| | மொத்தம் | 102.11 | 104.41 | 102.11 |

மொத்தம் மதிப்பீட்டுத்தொகை ரூ 104.41 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதித்தொகை ரூ 102.11 போக மீதித்தொகை ரூ 2.30 லட்சம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

1) மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிர்வாக அனுமதியினை மன்றம் பார்வையிட்டு பதிவு மேற்கொள்ளலாம்.

2) மதிப்பீட்டுத்தொகை ரூ 104.41 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு தொகை ரூ 102.11 இலட்சத்திற்கு கூடுதல் தொகை ரூ 2. 30 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ1. 6959/07

<u>தீர்மான எண் –383</u>

அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது.
அலுவலகக்குறிப்பு 2ன்படி அனுமதியளிக்கப்பட்டது.

3. இந்நகர்மன்றத் தீர்மான எண் 700 நாள் 30–6–2006ல் இந்நகராட்சிப் பணிகளுக்கான போதுமான கணனிகள் மற்றும் அதன் இணை சாதனஙகள் வாஙக அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ 2. 70 இலட்சத்தை 12வது மாநில நிதிக்குழு ஆணைய பரிந்துரையின் கீழ் (2006–07 முதல் அரையாண்டு) வாஙகிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்வலுவலக 26–7–2006ம் தேதிய வேலை உத்திரவில் கீழ்க்காணும் பொருட்கள் விநியோகம் செய்ய H C L நிறுவனத்திற்கு உத்திரவிடப்பட்டது

| வஎண் | விபரம் | எண்ணிக்கை | விலைவிகிதம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கணனி | 8 எண்ணங்கள் | 32000/– | 256000/– |
| 2 | லேசர் ஜெட் | 1 எண்ணம் | 22561/– | 22561/– |
| 3 | லேசர் பிரிண்டர் | 6 எண்ணங்கள் | 7820/– | 46920/– |
| 4 | டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர் | 3 எண்ணங்கள் | 8800/– | 26400/– |
| | | | மொத்தம் | 351881/– |

மேற்காண் பட்டியல் தொகையில் ரூ 3,51,881/– ல் 31–1–2007ம் நாளன்று முதல் மற்றும் பகுதி பட்டியல் தொகை ரூ 2,70,000/– 12வது மாநில நிதிக்குழு ஆணைய பரிந்துரையின் கீழ் வழஙகப்பட்டுள்ளது. இவற்றில் கூடுதல் செலவினம் தொகை ரூ 81,881/– H C L நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** கூடுதல் செலவினத்தொகை ரூ 81,881/–
பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம்
அனுமதி அளிக்கலாம்.

இ1. 6641/06

**<u>தீர்மான எண் –384</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

4. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை கடித எண் அ2. 1255/2007–2 நாள் 7–6–2007 செயல்முறை ஆணையில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் 2007–08ம் ஆண்டு ஒதுக்கீட்டின் கீழ் மாநிலஙகளவை உறுப்பினர் திரு கே.பி.கே. குமரன் அவர்கள் பரிந்துரை செய்த பின்வரும் அட்டவணையில் கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழஙகி உத்திரவிடப்பட்டுள்ளது.

| வஎண் | பணியின் பெயர் | பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு (ரூ இலட்சத்தில்) | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கக்கன் பார்க்கில் சத்துணவு மையம் கட்டிடம் கட்டுதல் | 3. 00 | 3. 00 |
| 2 | குருஸ்புரத்தில் தாய்சேய் நல மையம் கட்டிடம் கட்டுதல் | 10.00 | 10. 00 |
| | மொத்தம் | 13. 00 | 13. 00 |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ1.9395/07

**<u>தீர்மான எண் –385</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

5. இந்நகரரட்சியில் உள்ள எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் வைத்து பராமரிக்கும் அறைக்கைகு Steel Rack இல்லாமல் எழுதுபொருட்கள், பதிவேடுகள் தரையில் தற்போது வைக்கப்பட்டு வருகிறது. எழுது பொருட்கள் வைக்கும் அறைக்கு 3 அடி நீளம் 1 1/2 அடி அகலம் , 7 அடி உயரம் கொண்ட 6 தட்டுகள் உடைய Steel Rack 9 எண்ணமும் சி2 இருக்கையில் தணிக்கை சம்பந்தமான கோப்புகள் வைப்பதற்கு 6 1/2அடி உயரம் கொண்ட இரும்பு பீரோ ஒன்று வாஙகவும் அதற்குண்டான உத்தேச செலவுத்தொகை ரூ 30,000/—க்கும் மேற்படி பொருட்களை தூத்துக்குடி பெண்கள் கூட்டுறவு பண்டகசாலை ( E. E. 410) லிமிடெட் நிறுவனத்தாரிடமிருந்து வாஙகுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

பி7. 21440/02

**<u>தீர்மான எண் —386</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் துறை அலுவலர்கள் அலுவலக வாகனம் என 34 எண்ணஙகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை அனைத்து வாகனஙகளும் ஒவ்வொரு ஆண்டும் தேவையான பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற்ற பின்னரே சாலையில் இயக்க வேண்டும். மற்றும் புதிய வாகனஙகள் சர்வீஸ் பணிகள் செய்ய வேண்டும். அரசாணையில் அனுமதிக்கப்பட்ட அளவுகோலின்படி ஓராண்டிற்கான உத்தேச செலவீனம் ரூ 12,00,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு**

1. வாகனஙகள் அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும்தகுதிச் சான்று பெற்றே இயக்க வேண்டும் என்பதால் இதற்கான செலவீனத்திற்கும் இதனை பொது நிதியில் இருந்து வழஙகவும் அனுமதிக்கலாம்.

2. அரசு விதிமுறைகள்படி அரசு அஙகீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப் புள்ளிகள் பெற்று நடவடிக்கைகள் தொடர அனுமதி அளிக்கலாம்.

நகஎண் 013784/2007/இ1

**<u>தீர்மான எண் —387</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி 42வது வார்டு மில்லர்புரம் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய்க்கு மேல் நிறுவப்பட்டுள்ள தெருவிளக்கு நிறுவியுள்ள மேற்கண்ட இடத்தில் குடிநீர்க் குழாய் உடைந்து போய் உள்ள காரணத்தினால் அதனை சரிசெய்ய இயலவில்லை. எனவே

மேற்கண்ட இடத்தில் உள்ள மின் கம்பத்தினை மாற்றி வேறு இடத்தில் பொருத்த மின் வாரியத்தாருக்கு செலுத்த வேண்டிய செலவுத்தொகை ரூ 23,675/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 9116/06

**<u>தீர்மான எண் –388</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

8. இயற்கை இடர்பாடுகள் தென்கிழக்கு பருவ காலம் 2006 திட்டத்தின் கீழ் சேதமடைந்த சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 27–6–2007ல் தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ 6627/– கீழ்க்கண்ட விபரப்படி வழுங்கப்பட வேண்டியுள்ளது.

| நாளிதழ் | தொகை |
|---|---|
| 1. தினகரன் | 3390/– |
| 2. தினத்தந்தி | 3237/– |
| மொத்தம் | 6627/– |

மேற்காண் விளம்பரச்செலவினம் தொகை ரூ 6627/– வழுங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ1. 8911/07

**<u>தீர்மான எண் –389</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதியளிக்கப்பட்டது.

9. 12வது நிதி ஆணைய பரிந்துரை மற்றும் ஊக்க நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 27–6–2007ல் தினத்தந்தி மற்றும் தினகரன் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ 6129/– கீழ்க்கண்ட விபரப்படி வழுங்கப்பட வேண்டியுள்ளது.

| நாளிதழ் | தொகை |
|---|---|
| 1. தினத்தந்தி | 2739/– |
| 2. தினகரன் | 3390/– |
| மொத்தம் | 6129/– |

மேற்கண்ட விளம்பரச் செலவினம் தொகை ரூ 6129/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ1. 10293/06

**<u>தீர்மான எண் –390</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதியளிக்கப்பட்டது.

**10.** தூத்துக்குடி நகராட்சியில் குடிநீர் விநியோக நிதியின் கீழ் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் நீர் உறிஞ்சும் கிணறு அமைத்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 18–4–2007ல் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ 2938/– வழஙகப்பட வேண்டியுள்ளது. மேற்காண் விளம்பரம் கட்டணம் ரூ 2938/– வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம்

மபஎண் 1/2007–08

**<u>தீர்மான எண் –391</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது.

**11.** இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சில வார்டு பகுதிகளில் வீடு தோறும் குப்பைகளை பிரித்து சேகரித்து நகராட்சி உரக்கிடஙகளில் குப்பைகளை சேர்க்கும் பணியினை ஒரு ஆண்டிற்கு தனியார் வசம் ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 30–5–07 அன்று The Financial Express ஆஙகில நாளிதழ் மற்றும் தீக்கதிர் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ 15,351/– கீழ்க்கண்ட விபரப்படி வழஙக வேண்டியுள்ளது.

| நாளிதழ் | தொகை |
|---|---|
| Financial Express | 9120/– |
| தீக்கதிர் | 5952/– |
| மொத்தம் | 15072/– |
| சேவை வரி | 279/– |
| ஆக மொத்தம் | 15351/– |

மேற்காண் விளம்பரக் கட்டணம் ரூ 15,351/– வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

எச்1. 254/2007

**<u>தீர்மான எண் –392</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது.

12. இந்நகராட்சிப் பகுதியில் அலைந்து திரியும் 420 நாய்களை பிடிப்பதற்கும் மற்றும் A B C ( பிறப்பு கட்டுப்பாடு) அறுவை சிகிச்சை செய்யவும் ரூ 1,86,900/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தாராயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) வழங்க தமிழக அரசு ஆணை எண் 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 18–1–2007ன்படி அனுமதி வழங்கியுள்ளது. முதல் கட்டமாக ஒரு நாய்க்கு தலா ரூ 445/– செலவீனத்தில் நாய்கள் பிடிப்பதற்கும் அறுவை சிகிச்சை செய்யவும் பொது நிதியிலிருந்து முன்பணமாக செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கப்பெற்றவுடன் பொது நிதியில் ஈடு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு 1.** அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.

எச்3. 1858/2005

**<u>தீர்மான எண் –393</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

13. தூத்துக்குடி நகராட்சியின் 2003–04ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் வழங்கல் (2) வடிகால் நிதி , சேமநலநிதி, ஆரம்ப கல்வி நிதி ஆகிய கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கையை நகராட்சி உடனிகழ் தணிக்கை அலுவலகத்திலிருந்து ஜெராக்ஸ் நகல் எடுத்த வகைக்கு ரூ 2076/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

நகஎண் சி2. 10180/07

**<u>தீர்மான எண் –394</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

14. தூத்துக்குடி சார்வு நீதிமன்றம் A.S. No. 88/2004 என்ற எண்ணிட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் டிகிரியை எதிர்த்து திரு முத்தையாபிள்ளை மற்றும் மூவரை எதிர் மனுதாரர் ஆகவும் ஆணையர், தூத்துக்குடி நகராட்சி அவர்களை 5 வது எதிர் மனுதாரர் ஆகவும் சேர்த்து சென்னை உயர்நீதி மன்ற கிளை மதுரை பெஞ்சில் திரு W. சுரேஷ் மற்றும் மூவரால் தொடரப்பட்ட இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு எண் S.A. 459/2007 மற்றும் MP 1/2007ல் தூத்துக்குடி நகராட்சி ஆணையர் அவர்கள் சார்பில் மதுரை உயர்நீதிமன்ற கிளை வழக்கறிஞர் திரு கடற்கரை பிஎஸ்சி., பி.எல்., (நகர்மன்ற வழக்கறிஞர்) அவர்கள் ஆஜராகவும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகையினை நகராட்சி பொது நிதிக் கணக்கிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு 1.** மதுரை உயர்நீதி மன்ற கிளை வழக்கறிஞர் திரு கடற்கரை பிஎஸ்சி பிஎல்.,(நகர்மன்ற வழக்கறிஞர்) இவ்வழக்கில் ஆஜராக அனுமதி அளிக்கலாம்

2. இவ்வழக்கிற்குரிய அனைத்து செலவினங்களை நகராட்சி பொது நிதிக் கணக்கிலிருந்து செலவு செய்து கொள்ளலாம்.

ஜி5. 25203/2002

**<u>தீர்மான எண் –395</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதியளிக்கப்பட்டது.

15. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் நகஎண் 42936/02/பி2 நாள் 14–2–2006 மற்றும் 23–3–2006ன்படியும் மற்றும் இந்நகர்மன்றத் தீர்மான எண் 725 நாள் 30–6–2006ன்படியும் 12வது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் திடக் கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தொகை ரூ 41,71,074/– அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இந்நாள்வரை தொகை ரூ 40,55,999/– மேற்படி திட்டத்தின் கீழ் செலவழிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ 1,15,075/– முதல் நிலை சேகரிப்பு பணிக்கு மூன்று சக்கர வாகனம் 6 வாஙகுவதற்கும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு முதல் நிலை சேகரிப்பு பணிக்கு மூன்று சக்கர வாகனம் 6 எண்ணஙகள் வாஙக 12 வது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் மீதமுள்ள தொகை ரூ 1,15,075/– மற்றும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

நகஎண் இ1. 649/04

**<u>தீர்மான எண் –396</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதியளிக்கப்பட்டது.

16. இந்நகராட்சி வார்டு எண் 20, பீச் ரோட்டில் அமைந்துள்ள "ஏழு கடற்கரை ஏக அடைக்கல தாயாகிய திவ்விய சாந்த மரிய தஸ் நேவிஸ் மாதா திருத்தலம்" பஙகுத் தந்தை அவர்களின் 21–2–2007ம் தேதிய கடிதத்தில் மேற்படி திருக்கோவில் திருப்பயணிகள் இலவசமாக தஙகிச் செல்லும் கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க கோரியுள்ளார்.

வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் 12–3–2007ம் தேதிய அறிக்கையில் மேற்படி இடத்தில் திருப்பயணிகள் இலவசமாக தஙகிச் செல்லும் கட்டிடமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் சொத்துவரி விலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்கள்.

எனவே இந்நகராட்சி வார்டு 20, பீச் ரோட்டில் அமைந்துள்ள " ஏழு கடற்கரை ஏக அடைக்கல தாயாகிய திவ்விய சாந்த மரிய தஸ்நேவிஸ் மாதா திருத்தலம்" திருப்பயணிகள் இலவசமாக தஙகிச் செல்லும் கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 அத்தியாயம் IV பிரிவு 86(a) ன்படி வார்டு எண் 20, பீச் ரோட்டில் அமைந்துள்ள " ஏழு கடற்கரை ஏக அடைக்கல தாயாகிய திவ்விய சாந்த மரிய தஸ்நேவிஸ் மாதா திருத்தலம்" திருப்பயணிகள் இலவசமாக தங்கிச் செல்லும் கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்கலாம்.

அ8. 2748/2007

**தீர்மான எண் –397**

அலுவலகக் குறிப்புப்படி சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்டது.

17. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1, கதவு எண் 111/33பி ஸ்டேட் பாஙக் காலனி வார்டு 1ல் இயஙகி வரும் செவன்த்டே அட்வென்டிஸ்ட் மெட்ரிகுலேசன் பள்ளி நிறுவனத்தின் கூடுதல் கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 அத்தியாயம் IV பிரிவு 86(c) ன்படி சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்கு அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

அ2. 20421/06

**தீர்மான எண் –398**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

18. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2007–08ன் கீழ் மற்றும் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 19–6–2007ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 19–6–2007ல் தினத்தந்தி மற்றும் தினகரன் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ 5700/– கீழ்க்கண்ட விபரப்படி வழஙகப்பட வேண்டியுள்ளது.

| நாளிதழ் | தொகை |
|---|---|
| 1. தினத்தந்தி | ரூ 2988/– |
| 2.தினகரன் | ரூ 2712/– |
| மொத்தம் | ரூ 5700/– |

மேற்கண்ட விளம்பரச் செலவினம் தொகை ரூ 5700/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதியளிக்கலாம்.

இ1. 9395/07

**தீர்மான எண் –399**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதியளிக்கப்பட்டது.

19. தூத்துக்குடி நகராட்சியின் சொத்துவரி, தொழில்வரி , தண்ணீர் கட்டண நிலுவை விவரஙகளை சம்பந்தப்பட்ட வரிவிதிப்புதாரர்களுக்கு செல்போனில் S.M.S. மூலம் தெரிவித்து வசூல் பணி மேற்கொள்ளவும், தொகை செலுத்திய விவரஙகளை உடனுக்குடன் செல்போனில் S.M.S. மூலம் தெரிவிக்கவும், இந்த முறையை அறிமுகப்படுத்த தேவைப்படும் மென்பொருள் (Software) தயார் செய்து பெற்று நகராட்சியில் ஏற்கனவே உள்ள Server–ல் இணைக்கவும் அதற்காக ஏற்படும் தோராயச் செலவினம் ரூ.51,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

நகராட்சியின் அனைத்து செயல்பாடுகளையும் கணினி மயமாக்கவும், மின் ஆளுமை (E.Governs) முறையில் சேவையை துரிதப்படுத்தவும் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வலியுறுத்தப்பட்டு வரப்படுவதால், S.M.S. மூலம் வரிவசூல் பணியினை முதல் கட்டமாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அ1/14652/07

**<u>தீர்மான எண் –400</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

20) இந்நகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்திலிருந்து தூத்துக்குடி நகருக்கு கூடுதல் குடிநீர் ஆதாரம் பெரும் வகையில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சும் கிணறுகளுக்கு புதிய நீர் மூழ்கி மோட்டார் பம்பு செட் பொருத்தும் பணிகள் செய்வதற்கு 6–7–2007 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விபரம் |
|---|---|---|
| 1 | திரு எஸ். வெள்ளைப்பாண்டி, கயத்தார் | 0.11%. குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு. எஸ். ரம்போலா, தூத்துக்குடி | 12.3% கூடுதல் டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் தனது தீர்மான எண் 362 நாள் 22–6–2007ம்தேதிய ரூ 8,30,000/– அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திரு எஸ். வெள்ளைப்பாண்டி, கயத்தார் என்னும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

நகஎண் இ3. 011815/07

**<u>தீர்மான எண் –401</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அங்கீகரிக்கப்பட்டது.

21. இந்நகராட்சிக்கு சொந்தமான மினி டிப்பர் லாரி TN69C–104 வாகனத்தின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுது நீக்கங்கள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று புதுப்பித்து இயக்க வேண்டும். இதற்கான செலவினத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 13–7–2007ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1) மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல் & இஞ்சினியரிங ஒர்க்ஸ்
போல்பேட்டை, தூத்துக்குடி ரூ 19,950/–

2) மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ்
சிதம்பரநகர், தூத்துக்குடி ரூ 23,250/–

3) மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கிளாட்வெல் காலனி
தூத்துக்குடி ரூ 22,125/–

<u>அலுவலகக் குறிப்பு:</u>

வரப்பெற்றுள்ள மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் மற்றும் இஞ்சினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 011280/2007

<u>தீர்மான எண் –402</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

22. தூத்துக்குடி நகராட்சி மேலப்பெரிய காட்டன் ரோட்டில் அமைந்துள்ள சி.வ. நகராட்சி தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து 30–4–2006ல் ஓய்வுபெற்ற திருமதி ஜெ. பொன்னாமணி என்பவர் தமது பணிக்காலத்தில் செலுத்திய சிறப்பு சேமநலநிதி தொகை ரூ 2640/– இதற்கான வட்டித்தொகை ரூ 1572/–ஆக மொத்தம் ரூ 4212/– அன்னாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

சி4. 14166/07

<u>தீர்மான எண் –403</u>

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் வழஙகப்பட்டது.

23. நகராட்சி சாமுவேல்புரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் பணிபுரிந்து 30–11–05ல் ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி சொ. சிவகாமி தமது பணிக்காலத்தில் செலுத்திய சிறப்பு

சேமநலநிதித்தொகை ரூ 2640/—யும் அதற்கான வட்டித்தொகை ரூ 1572/—யும் ஆக மொத்தம் ரூ 4212/— அன்னாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

சி4. 20435/06

**<u>தீர்மான எண் —404</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் வழஙகப்பட்டது.

24. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30—6—2007ல் ஓய்வுபெற்ற திருமதி வள்ளியம்மாள்/சண்முகம் என்பவர் பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/— வட்டி ரூ 2061/— பஙகுத்தொகை ரூ 5000/— ஆக மொத்தம்ரூ 10,021/—(ரூபாய் பத்தாயிரத்து இருபத்தொன்று மட்டும்)ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அனுமதிக்கலாம்

எச்2. 14678/07

**<u>தீர்மான எண் —405</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

25. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30—6—2007ல் ஓய்வுபெற்ற துப்புரவு பணியாளர் திரு பெருமாள்/ஆண்டி என்பவரின் பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/— வட்டி ரூ 2061/— பஙகுத்தொகை ரூ 5000/— ஆக மொத்தம் ரூ 10,021/—(ரூபாய் பத்தாயிரத்து இருபத்தொன்று மட்டும்)ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அனுமதிக்கலாம்

எச்2. 14424/07

**<u>தீர்மான எண் —406</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

26. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2007ம் வருடத்திற்கு தேவையான பொது சுகாதார தளவாடச் சாமான்கள் வாங்க நகர் மன்ற தீர்மானம் எண்.160 நாள் 21-03-2007ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 18-04-2007ம் தேதியான்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இரண்டு நிறுவனங்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வழங்கியுள்ளனர்.

| வ.எண். | தளவாடச்சாமான்கள் விபரம் | மெஸ்ஸர்ஸ் தமிழ்நாடு இஞ்ஜினியரிங் என்டர்பிரைசஸ், 52ஏ, அரசு நங்கையம்மன் கோவில் தெரு, தென்காசி | மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், 359, சுவாமி சன்னதி தெரு, தென்காசி. |
|---|---|---|---|
| 1 | பெரிய தூப்புமார் 6′ நீளமுள்ள பிரம்பு பிடியுடன் கூடியது | ரூ. 126/- | ரூ.128/- |
| 2 | மண்வெட்டி கனையுடன் கூடியது (டாட்டா கம்பெனி) | ரூ. 205/- | ரூ. 197/- |
| 3 | கைவாரி நாகத்தகடு 20 கேஜ் நீளம் 8″ அகலம் 6″ உள்ளது | ரூ. 52/- | ரூ. 48/- |
| 4 | வாறுகால் கரண்டி 3′ நீளம் உள்ள கட்டி மூங்கில் கைபிடியுடன் | ரூ. 44/- | ரூ. 42/- |
| 5 | இரும்பு பல் பிக்காஸ் - 5 முள் உள்ளது. மரகனையுடன் கூடியது சிகப்பு பெயின்ட் அடித்ததிருக்க வேண்டும். (டாட்டா கம்பெனி) | ரூ. 225/- | ரூ. 230/- |
| 6 | இரும்பு சட்டி சட்டியின் விட்டம் 16″ எடை 1.250 கிலோவுக்கு குறையாமல் | ரூ. 89/- | ரூ. 87/- |
| 7 | நாகத்தகடு வாளி உயரம் 12″ ஜி.ஐ தகடு 20 கேஜ் | ரூ. 172/- | ரூ. 167/- |
| 8 | மூங்கில் பிரம்பு 15 அடி நீளம் | ரூ. 190/- | ரூ. 195/- |
| 9 | கடப்பாறை 5 அடி நீளம் உள்ளது (டாட்டா கம்பெனி | ரூ.410/- | ரூ. 416/- |
| 10 | அரிவாள் 2 அடி நீளம் உரக்கு பட்டையில் | ரூ. 142/- | ரூ. 145/- |
| 11 | மூங்கில் பிரம்பு கூடை பெரியது | ரூ. 150/- | ரூ. 146/- |
| 12 | சவுள் ¾ x ¾ அளவுள்ள இரும்பு தகட்டில் 10′ நீளம் உள்ள இரும்பு கம்பியில் பொறுத்தியது | ரூ.255/- | ரூ. 265/- |

| | | | |
|---|---|---|---|
| 13 | கைபெறுக்குமார் | ரூ.14/- | ரூ. 13/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**குறிப்பு :**

மெஸ்ஸர்ஸ் தமிழ்நாடு இஞ்சினியரிங் என்டர்பிரைசஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட விரப்படி பொது சுகாதார தளவாடச்சாமான்களுக்கு குறைந்த விலையை கொடுத்துள்ளனர்.

1. பெரிய தூப்புமார் - ரூ. 126/-
2. இரும்பு பல் பிக்காஸ் - ரூ. 225/-
3. மூங்கில் பிரம்பு - ரூ. 190/-
4. கடப்பாரை - ரூ. 410/-
5. அரிவாள் - ரூ. 142/-
6. சவுள் - ரூ. 255/-

மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட தளவாடச்சாமான்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1. மண்வெட்டி - ரூ. 197/-
2. கைவாரி - ரூ. 48/-
3. வாறுகால் கரண்டி - ரூ. 42/-
4. இரும்பு சட்டி - ரூ. 87/-
5. நாகத்தகடு வாளி - ரூ. 167/-
6. மூங்கில் பிரம்பு கூடை - ரூ. 146/-
7. கைபெறுக்குமார் - ரூ. 13/-

மேற்கண்ட விலைகள் வெளி சந்தை விலைக்கு சமமாக உள்ளதான என அறிக்கை பெற்றதில் மண்வெட்டி, கடப்பாறை, முள்பிக்காஸ் ஆகியவை விலை அதிகமாக உள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் வெளிச்சந்தை விலைக்கான கீழ்க்கண்ட விலைக்கு ஒப்புதல் தரஇயலுமா என்று தெரிவிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரபப்படி வெளி சந்தை விலைக்கு மூன்று பொருட்களையும் தர சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

1. மன்வெட்டி - ரூ.178/- (கனகசாபாபதி முதலியார் சன்ஸ்)
2. கடப்பாறை - ரூ.350/-(தமிழ்நாடு இஞ்சினியரிங் என்டர்பிரைசஸ்)
3. இரும்பு பல்பிக்காஸ் - ரூ.190/-(தமிழ்நாடு இஞ்சினியரிங் என்டர்பிரைசஸ்)

எனவே மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளிகள் வெளிசந்தை விலைக்கு சமமாக இருப்பதால் குறைந்த விலைக்புள்ளிகள் கொடுத்தை அங்கீகரிக்கலாம்.

எச்1. 3201/2007

**தீர்மான எண் –407**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

27. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவன குழுமம் மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் 21–6–2007ம் தேதியிட்ட TNUDF/Energy eff/2007ம் எண்

கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் வழஙகல் ஆகியவற்றில் மின்சாரத்தை சிக்கனப் படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிதல் என்னும் ஆய்வினைச் செய்ய தேவையான முதல்நிலைப்புள்ளி விபரஙகளை சேகரிக்கும் பணியை TNUIFSL சென்று ஆய்வின் முடிவில் முறையான மின்சார சிக்கண நெறிமுறைகளை பின்பற்றினால் சுமார் 25 முதல் 30 சதவிகிதம் வரை சேமிக்க முடியும் என்று கண்டறியப்பட்டதாகவும் இத்திட்டத்தினை நகராட்சியில் செயல்படுத்துவதால் பின்வரும் நன்மைகள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ஒவ்வொரு நொடியிலும் மின்சாரம் சேமிக்கப்படுவதால் மின்சார இயந்திரஙகள் திறன் அதிக நாட்களுக்கு உழைக்கும். மேலும் அதன் முதலீட்டுப் பயனை விட இது அதிகம்
2. பசுமைக்கு எதிரான வாயுக்களின் உற்பத்தியை மறைமுகமாக குறைத்தல்
3. இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களை வேறு துறைக்கு மாற்றி உபயோகப் படுத்த முடியும்.
4. இதன் மூலமாக நகராட்சிக்கு மின்சார செலவு எந்த ஒரு முதலீடும் இல்லாமல் குறைய வாய்ப்புள்ளது.
5. இது உள்ளாட்சி அமைப்பின் செலவு குறைவதோடு மட்டுமல்லாமல் அதிக வருவாய் ஈட்டுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

எனவே இதனை கருத்தில் கொண்டு இந்நகராட்சியில் மின்சாரசிக்கண திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திற்கு அதிகாரம் அளிக்கவும், மேலும் இத்திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3. 12207/07

**<u>தீர்மான எண் –408</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

**28.** ஒப்பந்தக்காரர் திரு ஜி. ராஜேந்திரன் என்பவர் நகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக செலுத்திய முன் வைப்புத்தொகை ரூ 8500/– மூன்று ஆண்டு மேலாகியுள்ளதால் காலஙகடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே காலஙகடந்த தொகை ரூ 8500/–ஐ அன்னாருக்கு திரும்ப வழஙகுவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

பி3. 05568/07

**<u>தீர்மான எண் –409</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள் 27–7–2007

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி